# (ஓ) தொழில்நிலையும் தொழில் உறவுகளும்

## 1. முகவுரை

இலங்கையின் வேலைவாய்ப்பு, வேலைவாய்ப்பின்மை பற்றிய தரவுகள் ஒழுங்கற்ற இடைவெளிகளில் மேற்கொள்ளப்பட்ட மாதிரி அளவைகளிலிருந்து பெறப்பட்டதேதவிர, ஒரு ஒழுங்கான அடிப்படையில் சேகரிக்கப்பட்டிருக்க வில்லை. அனைத்தையுமடக்கிய புள்ளிவிபரங்கள் 1971இன் குடித்தொகை மதிப் பீட்டிலிருந்து கிடைக்கத்தக்கதாயிருப்பினும்,இத்தரவு இதுவரையும் வெளியிடப் படவில்லை. எனினும், 1973இல் மத்திய வங்கியால் நடாத்தப்பட்ட தொழி லாற்றும் தொழிற்படையின் அளவையின்படி, மாதிரிக் குடித்தொகையில் தொழில் வாய்ப்புள்ள, தொழில் வாய்ப்பற்ற வேலைப்படையினரின் அளவு 44.8 சதவீதமாகவிருந்தது. இந்த அளவையில் குடும்பத்தலைவிகள் வேலையி லீடுபடுவோராகக் கணிக்கப்பட்டனர். இவ்வகுப்பிலிருந்து குடும்பத்தலைவியரை நீக்கின், மாதிரிக்குடித்தொகையில் வேலைப்படை 34.4 சதவீதத்தைக் கொண் டிருக்கும். பின்னையது இலங்கையின் சமூகப் பொருளாதார அளவை 1969/70 லிருந்து எடுக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட பங்குபற்றிய வேலைப்படையின் வீதமான 33.6 சதவீதத்துடன் ஒப்பிடத்தக்கது.

தொழிலாற்றும் வேலைப்படையின் அளவைப்படி வேலைப்படையில் குடும் பத்தலைவியரை உள்ளடக்காத 17.4 சதவீதம் தொழிலற்றோராகும். 1973இன் நடுஆண்டுக் குடித்தொகை மாதிரி மதிப்பீடுகள் பகுத்து ஆயப்பட்டபோது, தொழிலுள்ளோர், தொழிலற்றோர் முறையே 37,57,000 ஆகவும் 7,93,000 ஆகவும் மதிப்பிடப்பட்டனர்.

மாதாந்த அடிப்படையில், வேலைவாய்ப்பின்மை பற்றிக் கிடைக்கக்கூடிய எண்தொகைகள், நாட்டின் தொழில்காண் நிலையங்களில் பதிவுபெற்றோரின் எண்ணிக்கையாக மட்டும் உள்ளது. இந்த வேலைவாய்ப்பின்மை எண்தொகை கள் நிறைவற்றவையாதலால் மத்திய வங்கி அரசாங்கத் துறையிலுள்ள தொழில்நிலையை ஆண்டுதோறும் விசாரணை செய்வதன்மூலம் நிறைவுசெய்ய முயன்றுள்ளது. ஊழியர் சேமநிதியில் (ஊ. சே. நி.) பதியப்பட்ட ஊழிய ரின் விவரங்களையும் வங்கி பெற்றுள்ளது. கிடைக்கக்கூடிய ஊழியர் சேமநிதி யின் அண்மைக்காலத் தரவு 1972ஆம் ஆண்டுக்கானதாகும். ஊழியர் சேம நிதித் திட்டத்தில் அடங்காத ஏனைய ஊழியர் சேமநிதிகளிலிருந்தும் தரவுகள் பெறப்பட்டுள்ளன. இவைகள் அங்கீகரிக்கப்பட்ட தனியார் ஊழியர் சேமநிதி கள் எனக் குறிக்கப்படுகின்றது. பெரிய கூட்டுத்தாபனங்கள், நிறுவனங்கள் ஆகிய இலங்கைப் போக்குவரத்துச் சபை, இலங்கை மின்சாரச் சபை போன்ற நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியரை இந்நிதியங்களின் ஊழியர்கள் உள்ளடக்கும்.

1973இல் தனியார் துறையில் 238 வேலைநிறுத்தங்கள் ஏற்பட்டன. இதில் 215 பெருந்தோட்டத்துறையிலும் 23 ஏனைய தொழில்நிலையங்களிலும் காணப்பட்டன. இத்துடன் திசெம்பர்18இல் பெருந்தோட்டத்துறைத் தொழி லாளர் மூன்றுநாள் அடையாள வேலைநிறுத்தம் செய்வதெனத் திட்டமிட்ட னர். ஆனால், இவ்வேலைநிறுத்தம் 1973, திசெம்பர் 28ஆந் திகதிவரையும் நீடித்தது. இவ்வேலைநிறுத்தத்தில் ஈடுபட்ட தொழிலாளர் எண்ணிக்கையும் வேலைநாள் இழப்பு எண்ணிக்கையும் இதுவரை கணிக்கப்படவில்லை.

## 2. தொழில்காண் நிலையங்களால் தொழில் பெற்றோர் எண்ணிக்கை

1971-1973 வரை தொழில்காண் நிலையங்களால் தொழிலில் அமர்த்தப்பட்டோர் எண்ணிக்கையின் வருடாந்த எண்தொகைகள் அட்டவணை 11 (ஒ) 1 இல் தரப்பட்டுள்ளது. 1973இல் தொழில்காண் நிலையங்களால் தொழிலிலமர்த்தப்பட்டவர்களது மொத்த எண்ணிக்கை 2,622 ஆக விளங்கியது. 1973இல் இந்நிலையங்களினுல் வேலையிலமர்த்தப்பட்ட எல்லாவகைத்தொழிலாளர்களதும் எண்ணிக்கை முன்னைய ஆண்டின் எண்ணிக்கையிலும்பார்க்க 20.1 சதவீதம் குறைந்ததாகக் காணப்படுகிறது.

### அட்டவணை II (ஒ) 1

### தொழிலில் அமர்த்தப்பட்டோரின் மொத்த எண்ணிக்கையும் ஒவ்வொரு பகுப்பிலும் பதிவு செய்யப்பட்டோரின் மொத்தத் தொகையில் அவர்களின் தொடர்பான முக்கியத்துவமும்

| ஆண்டு | தொழில்நுட்ப, எழுதுவினைஞர் | | தேர்ச்சிபெற்றோர் | | ஓரளவு-தேர்ச்சி பெற்றோர் | | தேர்ச்சிபெருதோர் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அமர்த்தப்பட்டோரின் எண்ணிக்கை | பகுப்பினுள் மொத்தப் பதிவு செய்தோரின் சதவீதம் | அமர்த்தப் பட்டோரின் எண்ணிக்கை | பகுப்பினுள் மொத்தப் பதிவு செய்தோரின் சதவீதம் | அமர்த்தப் பட்டோரின் எண்ணிக்கை | பகுப்பினுள் மொத்தப் பதிவு செய்தோரின் சதவீதம் | அமர்த்தப் பட்டோரின் எண்ணிக்கை | பகுப்பினுள் மொத்தப் பதிவு செய்தோரின் சதவீதம் | அமர்த்தப் பட்டோரின் எண்ணிக்கை | பகுப்பினுள் மொத்தப் பதிவு செய்தோரின் சத வீதம் |
| 1961 | 1,259 | 4.6 | 631 | 3.5 | 964 | 2.8 | 2,794 | 3.9 | 5,648 | 3.7 |
| 1962 | 1,263 | 3.7 | 468 | 2.7 | 809 | 2.3 | 2,315 | 3.5 | 4,857 | 3.2 |
| 1963 | 1,322 | 3.7 | 502 | 3.0 | 836 | 2.3 | 2,466 | 3.9 | 5,129 | 3.4 |
| 1964 | 1,722 | 4.4 | 535 | 3.2 | 945 | 2.5 | 3,599 | 5.5 | 6,801 | 4.3 |
| 1965 | 1,495 | 2.7 | 846 | 4.2 | 1,035 | 2.1 | 3,753 | 5.0 | 7,129 | 3.6 |
| 1966 | 1,056 | 1.6 | 740 | 3.4 | 917 | 1.5 | 4,089 | 4.5 | 6,802 | 2.9 |
| 1967 | 1,018 | 1.4 | 588 | 2.5 | 712 | 1.1 | 1,936 | 2.1 | 4,254 | 1.7 |
| 1968 | 680 | 0.9 | 780 | 3.1 | 794 | 1.1 | 2,696 | 2.6 | 4,950 | 1.8 |
| 1969 | 865 | 1.0 | 710 | 2.3 | 800 | 0.9 | 2,908 | 2.1 | 5,283 | 1.5 |
| 1970 | 526 | 0.5 | 584 | 1.5 | 428 | 0.4 | 1,287 | 0.7 | 2,825 | 0.7 |
| 1971 | 640 | 0.6 | 778 | 1.8 | 462 | 0.5 | 1,701 | 0.9 | 3,581 | 0.8 |
| 1972 | 612 | 0.7 | 529 | 1.2 | 656 | 0.6 | 1,496 | 0.7 | 3,293 | 0.7 |
| 1973* | 561 | 0.6 | 385 | 0.9 | 413 | 0.4 | 1,350 | 0.6 | 2,622 | 0.6 |

* தற்காலிகமானவை. மூலம்: தொழிற்றிணைக்களம்.

## 3. அரசாங்கத்துறையின் தொழில்நிலை

மத்திய வங்கியால் நடாத்தப்பட்ட 1972ஆம் ஆண்டுக்குரிய அரசாங்கச் சார்புடைய நிறுவனங்களுக்கும், (அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள், பல்கலைக் கழகங்கள், ஆய்வுநிலையங்கள், நியதிச் சட்டசபைகள் ஆகியன) அரசாங்க சேவைகளுக்குமான வருடாந்த அளவைகளுக்குக் கிடைத்த பதில் திருப்திகரமற்றதாயுள்ளது. ஏறத்தாழ 18 அரசாங்க சார்புடைய தாபனங்கள் பதில

ளிக்கவில்லை. இத்தாபனங்களின் தொழில்நிலை மதிப்பிடப்படவேண்டியிருந்தது. விசாரணைக்குப் பதிலளிக்காத அரசாங்கத் திணைக்களங்களிற் பணிபுரிவோரின் எண்தொகைகள் 1973ஆம் ஆண்டுக்கான அரசிறை, செலவினம் பற்றிய மதிப்பீடுகளிலிருந்து பெறப்பட்டன. இம்மதிப்பீடுகள் அங்கீகரிக்கப்பட்ட தொழில் நிலையினை வழங்கினும் அவற்றை உண்மையான தொழில்நிலை எண்களாகக் கொள்ளமுடியாது. ஊழியர்கள் அவர்களின் வகைகளின்படியும் தரங்களின் படியும் (நிரந்தர, தற்காலிக, அமைய) பாகுபாடு செய்யப்பட்டுள்ளனர். கணக்கிலெடுக்கப்பட்டவகைகளாவன —

1. உயர்பதவித் தரத்திலுள்ள நிருவாகத் தொழில்நுட்ப அலுவலர்கள்
2. கீழமைந்த ஊழியர்கள்
3. சிற்றூழியர்கள்
4. பாடசாலை ஆசிரியர்கள் (அரசாங்கத் திணைக்களங்களைப் பொறுத்த வரை)
5. ஏனையவர்கள்.

***(அ) அரசாங்கத் திணைக்களங்கள்***

1972, 1973ஆம் ஆண்டுகளுக்கான அரசாங்கத் திணைக்களங்களின் தொழில் நிலையின் மதிப்பீடுகள் அட்டவணை 11 (ஓ) 2 இற் தரப்பட்டுள்ளன

1973இல் அரசாங்கத் திணைக்களங்களின் ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை 8.0 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. கீழமைந்த தரத்திலுள்ள ஊழியர் எண்ணிக்கையில் ஏற்பட்ட அதிகரிப்பு என்றுமில்லாத அதிகரிப்பான துடன் 1972ஆம் ஆண்டிற்கான எண்தொகைகளிலும்பார்க்க 11.4 சதவீதத் தால் உயர்வடைந்தும் காணப்படுகிறது. நிர்வாகத்தரங்களிலுள்ள ஊழியர்கள் சிற்றூழியர்கள், பாடசாலை ஆசிரியர்கள் ஆகியோரின் எண்ணிக்கை 1973இல் முறையே 10.3, 7.1, 5.8 சதவீதங்களால் அதிகரித்தன.

1973இல் அரசாங்கத்திணைக்களங்களின் ஊழியரின் மொத்த எண்ணிக்கையில் ஏறத்தாழ 60 சதவீதம் கீழமைந்த ஊழியர், சிற்றூழியர் தரத்தில் இருந்தனர். மொத்த ஊழியர் எண்ணிக்கையில் உயர் அலுவலர் தரத்தில் உள்ளோர் 3.4 சதவீதமாக விளங்கும்போது. 28 சதவீதம் பாடசாலை ஆசிரியர்களாகக் காணப்பட்டனர்.

அரசாங்கத் திணைக்களங்களிலிருந்த நிரந்தர ஊழியர்களின் அளவு 1972 இல் காணப்பட்ட 88.1 சதவீதத்திலிருந்து 86.8 சதவீதமாக 1973இல் வீழ்ச்சியடைந்தது. தற்காலிக ஊழியர் எண்ணிக்கை 5.9 சதவீதத்திலிருந்து 6.1 சதவீதமாக அதிகரித்தபோது அமைய ஊழியர்தொகை ஆண்டின் காலப்பகுதியில் 5 9 சதவீதத்திலிருந்து 7.1 சதவீதமாக அதிகரித்தது.

## அட்டவணை II (ஒ) 2

## வேலைநிலைபற்றிய புள்ளிவிவரங்கள்—அரசாங்கத் திணைக்களங்கள்*

| தொழில்பகுப்பு | தாமும் தொழிலிலமர்த்தப்பட்டோரின் எண்ணிக்கையும் | | | | | | | | 1972க்கு மேலாக சதவீத மாற்றம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | நிரந்தரமான | | தற்காலிகமான | | நாட்கூலி | | மொத்தம் | | |
| | 1972 திசெம். 31 | 1973 திசெம். 31 | 1972 திசெம். 31 | 1973 திசெம். 31 | 1972 திசெம். 31 | 1973 திசெம். 31 | 1972 திசெம். 31 | 1973 திசெம். 31 | |
| 1. உயர்பதவியிலுள்ள நிருவாக, தொழில் நுட்ப வாழ்க்கைத் தொழில் அலுவலர்கள் | 10,983 | 11,917 | 725 | 1,019 | 21 | — | 11,729 | 12,936 | + 10.3 |
| 2. கீழமைந்த ஊழியர்கள் | 109,632 | 118,850 | 2,502 | 3,580 | 1,866 | 4,570 | 114,000 | 127,000 | + 11.4 |
| 3. சிற்றூழியர்கள் | 58,250 | 61,322 | 16,483 | 17,337 | 17,994 | 20,668 | 92,727 | 99,327 | + 7.1 |
| 4. பள்ளிக்கூட ஆசிரியர்கள் | 100,836 | 106,674 | — | — | — | — | 100,836 | 106,674 | + 5.8 |
| 5. ஏனையோர் | 28,961 | 300,075 | 936 | 1,031 | 1,053 | 1,344 | 30,950 | 32,450 | + 4.8 |
| மொத்தம் | 303,662 | 328,838 | 20,646 | 22,967 | 20,934 | 26,582 | 350,242 | 378,387 | + 8.0 |

மூலம்; இலங்கை மத்திய வங்கி.

குறிப்பு:*

1. (i) சட்டவாக்க அலுவலர்களும், அரசாங்க நிருவாகிகளும்.
   (ii) முகாமையாளர், தலைவர், ஏனைய உயர்பதவி அலுவலர்கள்.
   (iii) விஞ்ஞானிகள், தொழில் நுட்பவாளர்களும், பொறியியலாளர்களும், வைத்தியர்கள். பேராசிரியர்களும், விரிவுரையாளர்களும், கணக்காளர்கள், மதிப்பாளர்கள்.

2. (i) எழுதுவினைஞர் தரங்கள்.
   (ii) காசாளர்கள்.
   (iii) சுருக்கெழுத்தாளர்கள், தட்டெழுத்தாளர்கள், ஊசபர் இயந்திர இயக்குநர்கள்.
   (iv) தொலைபன்னி இயக்குநர்களும், அலுவலக எந்திர இயக்குநர்களும்.
   (v) மொழிபெயர்ப்பாளர்கள்.
   (vi) நீடிப்புப் பரிசோதகர்களும் விசாரணை அலுவலர்களும்,
   (vii) காவலர்களும், கிராம சேவையாளர்களும்,
   (viii) களஞ்சியக் காப்பாளர்

3. (i) தூதறிவிப்பாளர்.
   (ii) பணியாளர்.
   (iii) கவனிப்பாளரும் ஏவலாளரும்.
   (iv) சாரதிகள் (மோட்டார் வாகனங்கள், லொறிகள் முதவியன.)
   (v) பயிற்சி பெறுத தொழிலாளர்கள்.
   (vi) ஓரளவு பயிற்சி பெற்ற தொழிலாளர்கள்.

4. (i) முதல்வர்கள், துணை முதல்வர்கள், தலைமை ஆசிரியர்களும், உதவித் தலைமையாசிரியர்களும்,
   (ii) பயிற்சி ஆசிரியர்களாகத் தகைமை பெற்றோர், தராதரப்பத்திரம் பெற்ற ஆசிரியர்களும். ஆங்கிலத் தராதரம் பெற்ற ஆசிரியர்களும்.
   (iii) பட்டதாரிகள், இடைநிலைக் கலைப்பிரிவினர்.
   (iv) சிறப்புத் தகுதி பெருதோர், பகுதி நேர, நாட்சம்பள, ஆசிரியர்களும், பயிற்சி பெறும் ஆசிரியர்களும், மாணவ ஆசிரியர்களும்.

## (ஆ) அரசாங்கச் சார்புடைய நிறுவனங்கள்

அரசாங்கச் சார்புடைய நிறுவனங்களின் வேலைநிலை மதிப்பீடுகள் அட்டவணை 11 (ஒ) 3இல் தரப்பட்டுள்ளது.

### அட்டவணை II (ஒ) 3

### தொழில்நிலைப் புள்ளிவிவரங்கள் — அரசாங்கச் சார்புடைய நிறுவனங்கள்**

| | தரமும் தொழிலிலமர்த்தப்பட்டோரின் எண்ணிக்கையும் | | | | | | | | 1972ற்கு மேலான சதவீத மாற்றம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | நிரந்தரம் | | தற்காலிகம் | | நாட்கூலி | | மொத்தம் | | |
| | 1972 திசெம். 31 | 1973 திசெம். 31 | 1972 திசெம். 31 | 1973 திசெம். 31 | 1972 திசெம். 31 | 1973 திசெம். 31 | 1972 திசெம் 31 | 1973 திசெம். 31 | |
| 1. * நிருவாக, தொழில் நுட்ப, பயில் தொழில் அலுவலர்கள் ... | 14,033 | 14,900 | 571 | 690 | 184 | 260 | 14,788 | 15,850 | + 7.2 |
| 2.** கீழமைந்தஊழியர்கள் | 28,217 | 31,361 | 642 | 677 | 476 | 659 | 29,335 | 32,697 | + 11.5 |
| 3. † சிற்றூழியர்கள் ... | 83,216 | 87,029 | 9,564 | 9,470 | 19,048 | 22,459 | 111,828 | 118,958 | + 6.4 |
| 4.† பள்ளிக்கூடஆசிரியர்கள் ஏனையோர்கள் ... | 43,510 | 141,599 | 708 | 449 | 1,127 | 1,055 | 45,345 | 43,103 | — 4.9 |
| மொத்தம் | 168,976 | 174,889 | 11,485 | 11,286 | 20,835 | 24,433 | 201,296 | 210,608 | + 4.6 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

1.* (i) சட்டவாக்க அலுவலர்களும், அரசாங்க நிர்வாகிகளும்.
(ii) முகாமையாளர், தலைவர், ஏனைய உயர்பதவி அலுவலர்கள்.
(iii) விஞ்ஞானிகள், தொழில் நுட்பாளர்களும், வைத்தியர்கள், பேரசிரியர்களும், விரிவுரையாளர்களும், கணக்காளர்களும், மதிப்பாளர்களும்.

2.** (i) எழுதுவினைஞர் தரங்கள்.
(ii) காசாளர்கள்.
(iii) சுருக்கெழுத்தாளர்கள், தட்டெழுத்தாளர்களும், சைபர் இயக்குநர்களும்.
(iv) தொலைபன்னி இயக்குநர்களும், அலுவலக எந்திர இயக்குநர்களும்.
(v) மொழிபெயர்ப்பாளர்கள்.
(vi) நீடிப்புப் பரிசோதகர்களும், விசாரணை அலுவலர்களும்.
(vii) காவலர்களும், கிராம சேவகர்களும்
(viii) களஞ்சியக் காப்பாளர்கள்.

3.* (i) தூதறிவிப்பாளர்
(ii) பணியாளர்.
(iii) கவனிப்பாளர்களும், ஏவலாளர்களும்.
(iv) சாரதிகள் (மோட்டார் வாகனங்கள், லொறிகள் முதலியன.)
(v) பயிற்சி பெறாத வேலையாட்கள்.
(vi) ஓரளவு பயிற்சி பெற்ற வேலையாட்கள்.
(vii) பயிற்சி பெற்ற வேலையாட்கள்.

4.‡ (i) முதல்வர்கள், துணை முதல்வர்கள், தலைமை ஆசிரியர்களும், உதவித் தலைமையாசிரியர்களும்
(ii) பயிற்சி ஆசிரியர்களாகத் தகைமை பெற்றோர், தராதரப் பத்திரம் பெற்ற ஆசிரியர்களுள், ஆங்கிலத் தராதரம் பெற்ற ஆசிரியர்களும்.
(iii) பட்டதாரிகள், இடைநிலைக் கலைப் பிரிவினர்.
(iv) சிறப்புத் தகுதி பெறுதோர், பகுதி நேர, நாட் சம்பள, ஆசிரியர்களும், பயிற்சி பெறும் ஆசிரியர்களும், மாணவ ஆசிரியர்களும்.

* பொதுக் கூட்டுத்தாபனங்கள், பல்கலைக்கழகம், சபைகள்.

அரசாங்கசார்புடைய நிறுவனங்களின் புதிய ஊழியர் தெரிவின் அளவு 1973இல் வீழ்ச்சியடைந்தது. 1972இல் மொத்த வேலைவாய்ப்பு எண்ணிக்கையின் 12 1 சதவீதமாக இருந்த இவ்வீழ்ச்சியின் அளவு 1973இல் 4.6 சதவீதமாக விளங்கியது. ஊழியர் எண்ணிக்கையின் சதவீத அதிகரிப்பில் இவ்வீழ்ச்சி கீழமைந்த ஊழியர்வகையினைத்தவிர்ந்த ஏனைய வகைகள் யாவற்றிலும் ஏற்பட்டது. பின்னைய வகையில் காணப்பட்ட இவ்வதிகரிப்பு 11.5 சதவீதமாகும். 1973இல் உயர் அலுவலர்தரம், சிற்றூழியர் தரம் என்பவற்றிலுள்ள ஊழியர் எண்ணிக்கை 1972இல் இவை தொடர்பான எண்தொகைகளாக முறையே விளங்கிய 16.9, 20 5 சதவீதங்களிலிருந்து முறையே 7.2 சதவீதத்தாலும் 6.4 சதவீதமாக விளங்கினர்.

அரசாங்கச் சார்புடைய நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியரின் மொத்த எண்ணிக்கையில் ஏறத்தாழ 84 சதவீதம் நிரந்தர ஊழியர் பிரிவில் காணப்பட்டது. அதேவேளையில் அமைய, நிரந்தர ஊழியர்கள் முறையே 10 சதவீத, 5 சதவீதமாக விளங்கினர்.

4. (அ) ஊழியர் சேமநிலையத்தில் பதியப்பட்ட ஊழியர்கள்

ஊழியர் சேமநிதியத்தின்கீழ்ப் பதிவு செய்யப்பட்ட வேலைவாய்ப்பு ஊழியர் என்பவற்றின் எண்ணிக்கை பற்றி மிக இறுதியாகக் கிடைத்த எண்தொகை 1972ஆம் ஆண்டுக்குரியதாகும்.

1972இல் ஊழியர் சேமநிதிச்குக் செலுத்திய ஊழியரின் எண்ணிக்கை 38,485 ஆக 1970இன் எண்ணிக்கையான 34,460 உடன் ஒப்பிடும்போது, 12 சதவீத அதிகரிப்புக் கொண்டதாக விளங்கியது. 1968-1972 இற்கான ஊழியர் சேமநிதியத்தில் பதிவு செய்யப்பட்ட ஊழியர்கள் முக்கிய கைத்தொழில் பகுப்புக்களின் அடிப்படையில் பகுக்கப்பட்ட அட்டவணை 11 (ஒ) 4இல் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை II (ஒ) 4
ஊ. சே. நி. இன் கீழ்ப் பதிவுசெய்யப்பட்ட ஊழியர்கள்

| கைத்தொழில் | ஆண்டு மு வில் பதிவுசெய்யப்பட்ட தொகை | | | | |
|---|---|---|---|---|---|
| | 1968 | 1969 | 1970 | 1971 | 1972 |
| 1. பெருந்தோட்ட வேளாண்மை .. | 1,246,138 | 1,220,989 | 1,253,979 | 1,284,265 | 1,316,336 |
| 2. பெருந்தோட்டமல்லா வேளாண்மை ... | 4,743 | 6,415 | 5,100 | 7,455 | 13,093 |
| 3. சுரங்கத் தொழிலும் பார்குழித் தொழிலும் | 2,968 | 3,351 | 3,035 | 3,839 | 6,975 |
| 4. தயாரிப்புத் தொழில் ... | 174,187 | 206,194 | 222,955 | 264,007 | 293,238 |
| 5. கட்டட ஆக்கம் ... | 24,890 | 19,745 | 21,462 | 22,224 | 23,423 |
| 6. வர்த்தகமும் போக்குவரவும் ... | 176,502 | 186,733 | 198,196 | 236,530 | 268,426 |
| 7. பணிகள் ... | 99,452 | 105,794 | 115,161 | 125,086 | 136,746 |
| 8. பகுக்கப்படாதவை* ... | 11,388 | 4,719 | 8,557 | 13,813 | 16,161 |
| மொத்தம் ... | 1,740,268 | 1,753,940 | 1,828,445 | 1,957,239 | 2,074,398 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

* பிழைகளேயும், விடுபாடுகளேயும் உள்ளடக்கும்.

(i) இத்தொகை தொழிலேவிட்டு நீங்கியும் ஊ. சே. நி. உடன் வரவு நிலுவைகளைத் தொடர்ந்து வைத்திருக்கும் ஊழியர்களேயும் உள்ளடக்கும்

(ii) சில தாபனங்களின் தகவல்கள் நிறைவற்றவையாக இருப்பதால் அவற்றின் கைத்தொழிற் மகுப்பின் படியான பாகுபாடு சரியற்றதாகவும் இருக்கலாம்.

## அட்டவணை II (ஒ) 5

### 1972இல் மாவட்டங்களின்படியும், கைத்தொழில்களின்படியும் ஊ. சே. நி. இன் கீழ்ப்பதிவு செய்யப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை

வருடமுடிவில் எண்தொகைகள்

| கைத்தொழில் \ மாவட்டம் | கொழும்பு | கேகாலை | மாத்தறை | இரத்தினபுரி | கண்டி | நுவரெலியா | களுத்துறை | யாழ்ப்பாணம் | புத்தளமும் சிலாபமும் | குருணாகல் | பதுளை | காலி | வவுனியா | மாத்தளை | அநுராதபுரம் | அம்பாந்தோட்டை | திருகோணமலை | மட்டக்களப்பு | பொலன்னறுவை | மன்னார் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. ஏற்றுமதிவேளாண்மை | 31,107 | 108,386 | 111,452 | 189,542 | 265,379 | 155,438 | 83,183 | 262 | 20,104 | 48,189 | 151,689 | 108,109 | — | 42,818 | — | 06 | 130 | 537 | 05 | — | 1,316,336 |
| 2. ஏனைய வேளாண்மை | 7,285 | 52 | 356 | 660 | 130 | 13 | 244 | 85 | 181 | 23 | 257 | 2,307 | 70 | 129 | 317 | 639 | 31 | 162 | 87 | 65 | 13,093 |
| 3. சுரங்கத் தொழிலும், பார்க்குழித்தொழிலும் | 5,114 | 601 | — | 4 | 10 | — | 71 | — | 196 | 857 | 13 | 10 | — | 99 | — | — | — | — | — | — | 6,975 |
| 4. தயாரிப்புத் தொழில் | 202,495 | 3,362 | 4,686 | 1,498 | 8,195 | 1,156 | 9,833 | 5,992 | 17,119 | 13,287 | 2,334 | 9,043 | 202 | 3,135 | 716 | 647 | 746 | 6,863 | 984 | 945 | 293,238 |
| 5. கட்டட ஆக்கம் ... | 12,869 | 344 | 105 | 381 | 5,271 | 245 | 312 | 739 | 299 | 360 | 1,274 | 223 | 20 | 219 | 18 | 21 | 129 | 141 | 442 | 11 | 23,423 |
| 6. வணிகமும், போக்குவரத்தும் ... | 157,212 | 8,602 | 4,904 | 6,250 | 17,212 | 6,656 | 9,730 | 7,897 | 4,047 | 10,635 | 10,565 | 4,796 | 1,102 | 2,740 | 3,151 | 2,222 | 3,218 | 4,488 | 2,379 | 620 | 268,426 |
| 7. பணிகள் ... | 81,729 | 2,129 | 2,500 | 2,587 | 7,699 | 2,005 | 3,403 | 2,594 | 1,122 | 3,482 | 3,354 | 11,964 | 316 | 2,327 | 1,793 | 778 | 3,576 | 2,630 | 543 | 215 | 136,746 |
| 8. பகுக்கப்படாதவை .. | 8,585 | 180 | 3,211 | 138 | 286 | 137 | 315 | 325 | 937 | 369 | 69 | 534 | 05 | 205 | 10 | 02 | 16 | 656 | 97 | 84 | 16,161 |
| மொத்தம் ... | 506,396 | 123,656 | 127,214 | 201,060 | 304,182 | 165,650 | 107,091 | 17,894 | 44,005 | 77,202 | 169,555 | 136,986 | 1,715 | 51,672 | 6,005 | 4,315 | 7,846 | 15,477 | 4,537 | 1,940 | 2,074,398 |

குறிப்பு, (அ) ஊ: சே. நி. இன் கீழ் பதிவுசெய்யப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கைக்குத் தொடர்பான எண்தொகைகள். மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(ஆ) எண்தொகைகள் தற்காலிகமானவை.

(i) இவை தொழிலைவிட்டு நீங்கியும், ஊ. சே. நி. உடன் வரவு நிலுவைகளைத் தொடர்ந்தும் வைத்திருக்கும் ஊழியர்களையும் உள்ளடக்கும்.

(ii) இவை அங்கீகரிக்கப்பட்ட சேமநிதிகளை வைத்திருக்கும் வர்த்தகங்களிலுள்ள தொழில்களை உள்ளடக்கமாட்டா.

(iii) சில தாபனங்களின் தகவல்கள் நிறைவற்றவையாக இருப்பதால், அவற்றின் கைத்தொழிற் பகுப்பின் படியான பாகுபாடு சரியற்றதாகவும் இருக்கும்.

ஊழியர் சேமநிதியத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை 1971இல் காணப்பட்ட 1,957,239 இலிருந்து 2,074,398ஆக அல்லது 6.0 சதவீதமாக 1972இல் அதிகரித்தது. மிக உயர்ந்த அதிகரிப்புகள் சுரங்கத்தொழிலிலும் பார்க்குழித்தொழிலிலும் (82 சதவீதம்) காணப்பட்டது. தோட்டமல்லா வேளாண்மை, வர்த்தகமும் போக்குவரத்தும், தயாரிப்புத் தொழில் என்பவற்றின் அதிகரிப்புகள் முறையே 76, 14, 11 சதவீதங்களாக விளங்கின. 1972இல் பதிவு செய்யப்பட்டவரின் மொத்த எண்ணிக்கையில் 64 சதவீதம் விவசாயத்திலும், 14 சதவீதம் தயாரிப்புத் தொழிலிலும் 13 சதவீதம் வர்த்தக போக்குவரத்திலும் காணப்பட்டது.

அட்டவணை 11 (ஒ) 5, 1972ஆம் ஆண்டிறுதிவரை ஊழியர் சேமநிதியில் பதிவு செய்துள்ள ஊழியர்கள், கைத்தொழில், மாவட்ட அடிப்படையில் பரவியுள்ள தன்மையைக் காட்டுகின்றது.

ஊழியர்சேமநிதியத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட ஊழியரின் எண்ணிக்கையை, நிதியினால் உட்படுத்தப்படும் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு மட்டக் குறிகாட்டியாகக் கொள்வது ஏற்புடையதல்ல. காரணம், பெரும்பாலும் இது குறிக்கும் தொகை மிக உயர்ந்தே விளங்குகிறது. வெளியிடப்பட்ட எண் தொகைகள், வேலையிலுள்ளவர்களுடையதை மட்டுமன்றி வேலையில் இருந்து விலகிய ஆனால் இந்நிதியுடன் கணக்கு வைத்திருப்பவர்களிலிருந்து பெற்ற எண்தொகைகளையும் உள்ளடக்கும். ஆகவே இக்காரணம் கொண்டு பார்க்கையில் இந்நிதியத்திற்கு இவ்வாண்டுப்பகுதியில் ஒரு தடவையாவது உதவுதொகை செலுத்தியிருக்கும் ஊழியரின் எண்ணிக்கையையே ஒரு சிறந்த குறிகாட்டியாகக் கொள்ளலாம். ஊழியர் சேமநிதி பின்னைய எண்தொகையையே இயங்கும் கணக்குகளின் எண்ணிக்கையாக கொள்ளுகின்றது:

அட்டவணை (ஒ) 6 இவ்வாண்டுக்காலத்தில் கைத்தொழில்கள் ஊ. செ. நிதியத்துடன் கொண்டுள்ள இயங்கும் கணக்குகளின் எண்ணிக்கையைத் தருகிறது.

## அட்டவணை II (ஒ) 6
## வருடத்தில் ஊழியர் சேமநிதியுடன் உள்ள இயங்கும் கணக்குகள்

| கைத்தொழில் | இயங்கும் கணக்குகளின் எண்ணிக்கை | | 1972/71 சதவீத மாற்றம் |
|---|---|---|---|
| | 1971 | 1972 | |
| 1. பெருந்தோட்ட வேளாண்மை ... | 605,996 | 578,488 | — 4.6 |
| 2. பெருந்தோட்டமல்லா வேளாண்மை ... | 4,316 | 8,146 | + 88.7 |
| 3. சுரங்கத் தொழிலும் பார்க்குழித் தொழிலும் | 2,437 | 5,346 | + 119.4 |
| 4. தயாரிப்புத் தெபழில் ... | 134,282 | 126,266 | — 6.0 |
| 5. கட்டடவாக்கம் ... | 3,2483 | 2,872 | — 11.6 |
| 6. வர்த்தகமும் போக்குவரத்தும் ... | 113,563 | 118,098 | + 4.0 |
| 7. பணிகள் ... | 57,411 | 61,144 | + 6.5 |
| 8 பகுக்கப்படாதவை* ... | 7,73 | 6,555 | — 15.2 |
| மொத்தம் ... | 928,986 | 906,875 | — 2.4 |

* பிழைகளையும் விடுபாடுகளையும் உள்ளடக்கும. மூலம்: இலங்கை மத்திய வங்கி.

1972இல் பதிவுசெய்யப்பட்டோரின் எண்ணிக்கைக்கும் இயங்கும் கணக்குகளின் எண்ணிக்கைக்கும் இடையிலான இடைவெளி 57 சதவீதத்துக்குமேற்பட்டதாகும். இப்பெரும் ஒவ்வாமைக்கு வருடம் முழுவதும் வேலையற்றிருக்கும் பதிவுசெய்தோர் சிலர் ஓரளவு காரணமாய் இருப்பதோடு உதவுதொகைகளை செலுத்தத் தவறிய தொழில் தருநரும் மிகுதி இடைவெளிக்குக் காரணமாய் விளங்குகின்றனர்.

1972இல் பதிவு செய்யப்பட்டோர் எண்ணிக்கை 6 சதவீதம் கொண்ட ஒரு அதிகரிப்பைக்காட்டும்போது, இயங்கும் கணக்குகளின் எண்ணிக்கையில் 2 சதவீதம் கொண்ட ஒரு வீழ்ச்சி காணப்பட்டது. பெருந்தோட்ட விவசாயத்தின் இயங்கும் கணக்குகளின் குறைந்த எண்ணிக்கையே இவ்வீழ்ச்சிக்குப்பெரிதும் காரணமாகும். கட்டடத்தொழிலிலும் தயாரிப்புத்தொழிலிலும் கூட இவ்வாண்டில் வீழ்ச்சி காணப்பட்டது. இவ்விரு குறிகாட்டிகளும் சுரங்க, பார்க்குழித்தொழில் வேலைவாய்ப்புகள் அதிகரித்ததையும் ஏனைய பெருந்தோட்டமல்லா வேளாண்மையிலும் வேலைவாய்ப்புகள் பெருகியுள்ளதையும் எடுத்துக் காட்டுகின்றன.

**4. (ஆ) அங்கீகரிக்கப்பட்ட தனியார் சேமநிதிகளிலுள்ள ஊழியர்கள் (அ. த. சே. நி.)**

இந்நிதியங்களிலுள்ள அங்கத்தவர்களினதும் அவர்களின் விரிந்த தொழிற்பாடுகளினதும் எண்ணிக்கைபற்றிய தரவுகளைச் சமர்ப்பிக்குமாறு இந்நிதியங்களுக்கு மத்திய வங்கி அனுப்பிய கேள்விக் கொத்திற்குக் கிடைத்த பதில் மிகத் திருப்திகரமானதாகும். கைத்தொழில் ரீதியில் அ. ஊ. சேமநிதியங்களின் கீழ்ப் பதிவுசெய்யப்பட்ட ஊழியர்களின் பகுப்பாய்வினைக் கீழேயுள்ள அட்டவணை தருகின்றது.

**அட்டவணை II (ஒ) 7**

**அங்கீகரிக்கப்பட்ட தனியார் சேமநிதிகளிலுள்ள ஊழியர்கள்**

| கைத்தொழில் | 1972 | 1973 | 1973/72 சதவீத மாற்றம் |
|---|---|---|---|
| 1. பெருந்தோட்ட வேளாண்மை .. | 11,668 | 11,283 | — 3.3 |
| 2. பெருந்தோட்டமல்லா வேளாண்மை ... | 67 | 83 | + 23.9 |
| 3. சுரங்கத் தொழிலும் பார்க்குழித் தொழிலும் | 94 | 102 | + 8.5 |
| 4. தயாரிப்புத் தொழில் | 22,336 | 23,783 | + 6.5 |
| 5. கட்டடவாக்கம் ... | 2,845 | 2,840 | — 0.2 |
| 6. வர்த்தகமும் போக்குவரத்தும் ... | 62,483 | 63,394 | + 1.5 |
| 7. பணிகள் | 29,570 | 31,694 | + 7.2 |
| 8. பகுக்கப்படாதவை .. | 1,356 | 912 | — 3.3 |
| **மொத்தம்** .. | **130,419** | **134,091** | + 2.8 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

1973இல் அ. த. சே. நி. ஊழியர்களின் எண்ணிக்கை 2.8 சதவீதங்களால் அதிகரித்துக்காணப்பட்டது. இவ்வாண்டில் காணப்பட்ட மிகக்கூடிய அதிகரிப்பு பெருந்தோட்டமல்லா ஏனைய விவசாயத்தில் (23.9 சதவீதம்) காணப்பட்டது. குறிப்பிடத்தக்க அதிகரிப்புகள் சுரங்கத்தொழில், பார்குழித் தொழில் சேவைகளிலும் (8 5 சதவீதம்) தயாரிப்புத் தொழிலிலும் (6.5) காணப்பட்டது.

ஆயினும், பெருந்தோட்ட விவசாயத்திலுள்ள ஊழியர் எண்ணிக்கை 3.3 சத வீதத்தால் வீழ்ச்சியுற்றது. பல்வேறு கைத்தொழில்களில் ஏற்பட்ட மாற்றப் போக்குகள் ஊ. சே, நிதியத்தின் தரவுகளில் காட்டப்பட்டவற்றை ஒத்திருக் கின்றன.

## 5. தொழில் நாடிப்பதிவு செய்வோர்

தொழில் அல்லது தாம் செய்யும் தொழிலிலும் சிறந்த தொழிலினை நாடித் தொழில் காண் நிலையங்களிற் பதிவுசெய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 1972ஆம் ஆண்டிலிருந்த 445,422உடன் ஒப்பிடும்போது, 1973ஆம் ஆண்டிறுதியில் 470,491 ஆகக் காணப்பட்டது. 1973இல் தொழில்நுட்ப, எழுதுவினைஞர் வேலைகளுக்குப் பதிவு செய்யப்பட்டோர் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்தது. அதே வேளையில் ஏனைய தொழில்களைப் பொறுத்தமட்டில் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. 1972லும் இதே நிலை நிலவியது.

### அட்டவணை II (ஒ) 8

### நாட்டின் தொழிலிணைப்பு நிலையங்களின் பதிவேடுகளின்படி தொழில் அல்லது நல்ல தொழில் நாடிப் பதிவு செய்தோரின் எண்ணிக்கை

| | | கால முடிவுக்குரிய எண்தொகைகள் | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | தொழில்நுட்ப, எழுது வினைஞர் | தேர்ச்சி பெற்ற | ஓரளவு தேர்ச்சிபெற்ற | தேர்ச்சி பெருத | மொத்தம் |
| 1971 | திசெம்பர் ... | 96,310 | 42,655 | 99,520 | 198,915 | 437,400 |
| 1972 | மாச்சு ... | 91,530 | 42,890 | 100,393 | 204,461 | 439,274 |
| | யூன் ... | 91,223 | 42,949 | 99,861 | 201,199 | 435,232 |
| | செத்தெம்பர் ... | 91,114 | 43,378 | 100,374 | 206,943 | 441,809 |
| | திசெம்பர் ... | 89,170 | 43,234 | 101,554 | 211,464 | 445,422 |
| 1973 | மாச்சு ... | 85,847 | 43,017 | 104.003 | 216,281 | 449,148 |
| | யூன் ... | 86,585 | 43,342 | 105,271 | 221,213 | 456,411 |
| | செத்தெம்பர் .. | 85,828 | 43,676 | 105,978 | 227,220 | 462,702 |
| | திசெம்பர் ... | 86,408 | 43,756 | 107,379 | 232,948 | 470,491 |

மூலம்: தொழிற்றிணைக்களம்.

## 6. தொழில் உறவுகள்

1973இல் ஏற்பட்ட வேலைநிறுத்தங்களின் எண்ணிக்கைக்கான தரவு, அதிலீடுபட்ட தொழிலாளர் எண்ணிக்கை, தனியார்துறையின் வேலைநாள் இழப்பின் எண்ணிக்கை என்பன அட்டவணை (ஒ) 9இல் தரப்பட்டுள்ளது. ஏற்கெனவே கூறப்பட்டவாறு 1973 திசெம்பரில் தோட்டத்துறையில் ஏற்பட்ட அடையாள வேலை நிறுத்தத்தை இவ்வெண்தொகைகள் உள்ளடக்கவில்லை. 1972இல் பெருந்தோட்டத்துறையில் ஏற்பட்ட 165 வேலை நிறுத்தங்களுடன் ஒப் பிடுகையில் 1973இல் இத்துறையின் வேலைநிறுத்தங்களின் எண்ணிக்கை 215ஆக

30 சதவீத அதிகரிப்பைக் கொண்டுள்ளது. இதிலீடுபட்ட தொழிலாளர் எண்ணிக்கை 1972இல் காணப்பட்ட 52,832 இலிருந்து 89,393ஆக 1973இல் அதிகரித்தது. இவ்வாண்டின் வேலைஇழப்பு நாளின் அதிகரிப்பு 86,500 ஆகும். ஏனைய தொழில்நிலையங்களில் காணப்பட்ட வேலைநிறுத்தத்திலீடுபட்ட தொழிலாளர் எண்ணிக்கையும் வேலைநாள் இழப்புகளின் எண்ணிக்கையும் முறையே 2,058 ஆலும், 5,371ஆலும் அதிகரித்தன.

1973இல் முன்னைய ஆண்டைப்போலவே வேலைநிறுத்தங்களுக்குக் காரணமான கூலி உயர்வுக்காக விடுக்கப்பட்ட கோரிக்கை, பொதுவாக வேலை நிலைகளின் முன்னேற்றத்துக்காக விடுக்கப்பட்ட கோரிக்கைகளிலும் பார்க்கக் குறைந்த முக்கியத்துவம் உடையதாகவே விளங்குகிறது. வேலை நிறுத்தங்களில் 61 சதவீதமானவை சிறப்பான வேலை வசதிகளுக்கான கோரிக்கைகளாகவும் கீழ்நிலையில் உள்ள அலுவலர்களின் தகராறுகளைத் தீர்க்கவிடுக்கப்பட்ட கோரிக்கைகளாகவும் விளங்கின. 1973இன் மொத்த வேலைநிறுத்தங்களின் எண்ணிக்கையில் 14 சதவீதத்துக்கு வேலை இழப்பு வகைகூறுகையில் உணவுப் பிரச்சினை 17 சதவீதத்திற்கு வகை கூறியது.

### அட்டவணை II (ஒ) 9

### தனியார்துறை வர்த்தகங்களில் வேலைநிறுத்தங்கள்

| ஆண்டு | பெருந்தோட்டங்கள் | | | ஏனைய தொழில்கள் | | |
|---|---|---|---|---|---|---|
| | வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை | பங்கு பற்றிய வேலையாட்கள் | இழந்த ஆள் வேலை நாட்கள் | வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை | பங்கு பற்றிய வேலையாட்கள் | இழந்த ஆள் வேலை நாட்கள் |
| 1961 ... | 90 | 29,223 | 317,866 | 39 | 38,013 | 170.372 |
| 1962 ... | 138 | 42,569 | 193,792 | 50 | 25,730 | 801,882 |
| 1963 ... | 174 | 62,511 | 359,905 | 58 | 29,819 | 479,678 |
| 1964 ... | 201 | 68,009 | 611,060 | 103 | 21,409 | 274,623 |
| 1965 ... | 175 | 70,929 | 482,259 | 55 | 10,085 | 89,952 |
| 1966 ... | 132 | 138,259 | 4,117,264 | 32 | 4,592 | 34,351 |
| 1967 ... | 194 | 74,968 | 414,636 | 36 | 14,883 | 284,709 |
| 1968 ... | 171 | 65,909 | 722,690 | 26 | 11,308 | 265,726 |
| 1969 ... | 146 | 56,861 | 406,150 | 43 | 6,317 | 58,015 |
| 1970 ... | 254 | 125,530 | 1,030,310 | 86 | 23,488 | 281,253 |
| 1971 ... | 125 | 50.847 | 273,531 | 32 | 39,955 | 239,760 |
| 1972 ... | 165 | 52,832 | 273,717 | 22 | 2,205 | 25,181 |
| 1973* ... | 215 | 89,393 | 360,217 | 23 | 4,263 | 30,552 |

* தற்காலிகமானவை

மூலம்: தொழிற்றிணைக்களம்.